மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மருத்துவமனை பார்ப்பதற்கு மாத்திரம் அல்ல, அங்கே இருப்பதற்குக் கூட முடியவில்லை. வேறு மருத்துவமனை கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் காச நோயாளிகளுக்குத் தனி மருத்துவமனை ஒன்றும் கிடையாது. தலைமை மருத்துவ மனையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனிப்பட்ட முறையில் கண்காணிப்பு நடத்துகிறார்கள். ஆகவே, இதிலே தனிப்பட்ட . . . . .

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிந்தபிறகு சொல்லுங்கள்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ : காச நோயாளிகளுக்கு என்று தனிப்பட்ட மருத்துவமனையைக் கட்டி வசதி செய்து தருகின்ற உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திடம் உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, I rise on a point of order not with a view to affect Mr. Edmund Fernando or anybody in particular in this House. When a question is tabled concerning some particular hospital, the Minister will not be able to answer supplementary questions relating to some other hospital. At that rate I can ask about Tiruttani, another member may ask about Gobichettipalayam, a third member about Palni and so on. Let us not go at a tangent and waste the time of the House. I would request you to request the Members to put supplementary questions relating to the main question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூல வினாவுக்கு அளித்த விடையை ஒட்டித் தான் துணை வினாக்கள் இருக்க வேண்டுமென்று நமது 38-வது விதி இருக்கின்றது. இருந்தபோதிலும், மாண்புமிகு அமைச்சர்கள் விரும்பினால் அதைப்பற்றியோ, வேறு எதைப்பற்றியோ, ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லலாம். அதற்கு அவர்களுக்கு எப்போதும் உரிமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கப்படும்.

Underground drainage system for Kancheepuram Town.

*209 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) Whether the Kancheepuram Municipality has applied for a loan for effecting underground drainage system in their town ; and

(*b*) If so, what is the estimate thereof ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : (*a*) & (*b*) No. The investigation work in connection with the drainage scheme has been undertaken and it is in progress. The estimates will be prepared after that work has been completed.

THIRU K. VINAYAKAM : Whereas Kancheepuram town is considered to be the holiest of towns—to quote a common adage 'Nagareshu Kanchi '—whereas it happened to be the headquarters of the Pallava Kingdom whereas it happens to be the birth place of our Chief Minister and whereas there is a possiblity of the headquarters of the Chingleput District being transferred to Kancheepuram, will the Government take up the issue and grant a loan though the investigation is in progress ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Necessary steps are being taken . There is no application for the grant of a loan.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. லெ. சுப்பிரமணியம் அவர்கள், திரு. வினாயகம் அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார்கள் என்பதை நினைவில் வைத்து, வினாவைக் கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, திரு. வினாயகம் அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பியிருப்பதால், அதை ஒட்டியே கேள்வி கேட்க விரும்புகிறேன். எந்த எந்த நகரசபையிடமிருந்து புதிய பாதாளச் சாக்கடை சம்பந்தமாக மனுக்கள் வந்திருக்கின்றன. அரசாங்கப் பண உதவிப் போதவில்லையென்றால் அந்த நகரசபைகள் நேரிடையாக எல்.ஐ.சி. யிடமிருந்து கடன்பெறும் ஒரு திட்டத்தை அரசாங்கத்திடம் அனுப்பியிருக்கிறார்களா ? அதை அரசாங்கம் அனுமதிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரக் குறிப்புகள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிகேள்வி போட்டால் அது பற்றியவிவரம் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளி வைக்கப்பட்ட வினா எண் 204 :

வாலாஜா வட்டத்திலுள்ள நவ்லாக் கிராமம்

* 204—வினா. **திரு எம். அப்துல் கபூர் சாகிப் :** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாலாஜா தாலுக்காவில் நெ. 20 நவ்லாக் என்ற பிரிஹோல்ட் கிராமத்தை ரயத்துவாரியாக மாற்றும் யோசனை உள்ளதா ?

(இ) ஆம் எனில் அங்குள்ள குடிமக்களின் உரிமைகளை பிரிஹோல்ட் தாரர் கெடுத்துவருவது அரசாங்கத்தின் கவனத்துக்கு வந்துள்ளதா ?

(உ) மேற்படி கிராம மக்களின் உரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். அப்துல் கபூர் சாகிப் : அந்தப் பகுதியில் புதிய கிணறுகளுக்குப் பம்ப் செட் போடப்பட்டும் அதற்கு மின்சாரம் வாங்க முடியாமல் அவதிப்படுகிறோம். அவர்களுக்குத் தனிச் சலுகை கொடுத்து விவசாயம் பாதிக்காத முறையில் மின்சார சப்ளை கொடுக்க இந்த அரசு யோசிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.